www.kalviexpress.in
www.kalviexpress.in

*அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி,*

**..................................................................**

# 8

# ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

## இரண்டாம் முப்பருவத் தேர்வு – 2019
## விடைக் குறிப்பு
## (ஈரோடு மாவட்டம்)

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | : | ........................................................ |
| பதவி | : | பட்டதாரி ஆசிரியர் (சமூக அறிவியல்) |
| தேர்வு நாள் | : | 18.12.2019 |

Send Your Questions & Answer Keys to our email ID - kalviexpress@gmail.com

## எட்டாம் வகுப்பு - சமூக அறிவியல்

## இரண்டாம் முப்பருவத் தேர்வு 2019
## வினா விடை
## ஈரோடு மாவட்டம் 18.12.2019

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண்கள்: 100**

**I. சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **(10 x 1 = 10)**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?
   **இ). அல்போன்சோ - டி - அல்புகர்க்.**

2. வேதம் என்ற சொல் **ஆ. சமஸ்கிருதம்** த்திலிருந்து வந்தது.

3. இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்
   **இ).பீகார்.**

4. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்? **ஈ). டிசம்பர் 5**

5. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம்பெயர்தல்
   **இ). குடியேறுபவர்** எனப்படுகிறது.

6. காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் **அ). 78.09%**

7. இந்தியாவில் முதல் குடிமகன் யார்? **ஆ). குடியரசுத் தலைவர்.**

8. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு **ஆ). 1976**

9. காகிதப் பணத்தை அறிமுகப்படுத்தியது யார்? **இ). முகலாய பேரரசு**

10. அவசர காலத்தில் அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண் ....
    **அ) 108**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **(10 x 1 = 10)**

11. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் **புது தில்லியில்** அமைந்துள்ளது.

12. 2009 ஆம் ஆண்டு இலவசக் கட்டாய கல்வி சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு **அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA)** ஆகும்.

13. பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு **1956.**

14. பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு **பாறையியல்.**

15. இந்தியாவின் **புது தில்லி** நகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.

16. நிலச்சரிவு **இயற்கை** இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

17. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை **29** ஆகும்.
    ***(*** 28 மாநிலங்கள், 9 யூனியன் பிரதேசங்கள் - 31.10.2019 அன்று முதல்)***

18. சமயச் சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி அது **சம உரிமை** அளிக்கிறது.

19. வங்கி என்ற சொல் **இலத்தீன்** வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.

20. வாகனம் ஓட்டும்பொழுது எப்போதும் **இடது** புறம் செல்லவும்.

**III. பொருத்துக:** **(10 x 1 = 10)**

| | | |
|---|---|---|
| 21. டெல்லி | - | **இரண்டாம் பகதூர்ஷா** |
| 22. கான்பூர் | - | **நானா சாகிப்** |
| 23. இட்சிங் | - | **சீன அறிஞர்** |
| 24. உட்ஸ் கல்வி கொள்கை | - | **இந்திய கல்வியின் மகாசாசனம்** |
| 25. பனித்துளி மற்றும் மழைத்துளி | - | **கல்மழை** |
| 26. காலநிலை | - | **நீண்ட நாளைய மாற்றங்கள்** |
| 27. திருமணம் | - | **சமூக மற்றும் பண்பாட்டு இடம்பெயர்வு** |
| 28. நில அதிர்வு | - | **சுனாமி** |
| 29. குழந்தைகள் | - | **வருங்கால குடிமக்கள்** |
| 30. அரசியல் உரிமை | - | **வாக்களிக்கும் உரிமை** |

Send Your Questions & Answer Keys to our email ID - kalviexpress@gmail.com

**IV. சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.** **(10 x = 10)**

**31.** சுயசரிதை எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **சரி**

32. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். **சரி**

33. சரகர் மற்றும் சுரஸ்ருதர் ஆகியோரின் குறிப்புகள் மருத்துவத்தைக் கற்றுக் கொள்ள ஆதாரங்களாக இருந்தன. **சரி**

34. கல்வியை ஊக்குவிப்பதில் அரசர்களும், சமூகமும் தீவிர அக்கறை காட்டியதாக ஜாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன. **சரி**

35. மூடிபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்த் துளிகளைப் பெற்றிருப்பதில்லை. **தவறு**

36. குடிசைப் பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது. **சரி**

37. நவீன காலத்தில் ஒரே சமயத்தில் அதிக மக்களின் இடம்பெயர்வு நடைபெறுவதில்லை. **சரி**

38. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். **சரி**

39. சமயச் சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளது. **தவறு**

40. சாலை விபத்துக்கள் தொடர்பான பிரச்சனை சாலையில் மட்டும் உள்ளது. **தவறு**

**V. கீழ்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி :** **(15 x 2 = 30)**
**(ஏதேனும் 15 மட்டும்)**

**41. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் வரலாற்றுக் காப்பகம் எனப்படுகிறது.
- இந்திய தேசிய ஆவணக் காப்பகம் (NAI) புதுதில்லியில் அமைந்துள்ளது.
- இந்திய அரசின் முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பது இதன் முக்கியப்பணி

**42. இருட்டறைத் துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.**

- சிராஜ் உத் தௌலாவின் படைவீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைபிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்றுப் புகாத ஓர் சிறிய இருட்டு அறையில் ஒரு இரவு முழுவதும் அடைத்து வைத்தனர்.
- மறுநாள் காலை அவர்கள் அனைவரும் இறந்திருந்தனர். இச்சம்பவம் வரலாற்றில் ”இருட்டறை துயரச் சம்பவம்” என்று அழைக்கப்படுகிறது.

**43. துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. ஹைதராபாத் 2. தஞ்சாவூர் 3. அயோத்தி 4. பேஷ்வா 5. போன்ஸ்லே
6.குவாலியர் 7. இந்தூர் 8.ஜெய்ப்பூர் 9. உதய்பூர் 10.ஜோத்பூர்

**44. பண்டைய இந்தியாவில் உருவான மிகவும் குறிப்பிடத்தக்க பல்கலைக் கழகங்களின் பெயர்களை எழுதுக.**

1. தட்சசீலம், 2. நாளந்தா 3. வல்லபி 4. விக்கிரமசீலா 5.ஓடண்டாபுரி
6.ஜகத்தால 7. பனாரஸ் 8. காஞ்சி

**45. தட்ச சீலம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

- பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது மேற்கு பாகிஸ்தானில் உள்ளது.
- இது ஒரு முக்கியத் தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியாகும்.
- 1980 ல் யுனெஸ்கோவின் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.
- சாணக்கியர் தனது அர்த்தசாஸ்திரத்தை இங்கிருந்து தொகுத்தார்.

**46. சோழர் காலத்தில் தழைத்தோங்கிய கல்வி நிலையங்களைக் குறிப்பிடுக.**

- இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் புகழ்பெற்ற வேதக்கல்லூரியாக இருந்தது
- திருபுவனையில் ஒரு வேதக் கல்லூரி செழித்தோங்கியது.

**47. இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை?**

- பருத்தி, பட்டு, கம்பளி, மஸ்லின் முதலிய நெசவுத்தொழில்
- மரவேலை, தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், உலோக வேலை
- நகைகள் செய்தல், பானை தயாரித்தல், பாத்திரங்கள் தயாரித்தல்

**48. பாறைகள் - வரையறு.**

- பாறைகள் என்பது திட கனிமப் பொருட்களால் புவியின் மேற்பரப்பில் உருவானதாகும்.
- இது ஒரு முக்கிய இயற்கை வளம். இயற்கையிலேயே கடின, மென்தன்மையுடையது.

**49. காலநிலை - வரையறு:**

- காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலை சராசரியைக் குறிக்கும்.
- வானிலைக் காரணிகளின் சராசரிக் கூறுகளை 35 ஆண்டுகளுக்கு கணக்கிட்டுக் கூறுவது ஆகும்.

**50. இடம்பெயர்தல் - வரையறு**

- ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தம் இருப்பிடத்தை விட்டு மாற்றுவதே இடம் பெயர்தல்.

**51. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கியக் காரணங்கள் யாவை?**

- வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிக்காக இடம்பெயர்கிறார்கள்.

**52. இடர் - வரையறு.**

- ஒரு பொருளோ, நபரோ, நிகழ்வோ அல்லது காரணியோ மக்கள் அல்லது கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார வளங்களுக்கு இழப்பு ஏற்படுத்தினால் அது இடர் எனப்படும்.

**53. இடரின் முக்கிய வகைகள் யாவை?**

- 1. இயற்கையினால் ஏற்படும் இடர்கள்: எ.கா: புயல், எரிமலைவெடிப்பு
- 2. மனித செயல்களால் உருவாக்கப்படும் இடர்கள்: எ.கா: தொழிற்சாலைகளின் இராசயன கழிவு அல்லது எண்ணெய்க் கழிவு
- 3. சமூக - இயற்கை காரணிகளால் ஏற்படும் இடர்கள்: எ.கா: சதுப்பு நிலக் காடுகள் அழிக்கப்படுவது, வாகன, தொழிற்சாலை புகை.

**54. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?**

- மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை ஆளுநர் மாநில முதலமைச்சராக நியமிக்கிறார்.

**55. சமயச்சார்பின்மையைப் பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக.**

- இராஜாராம் மோகன்ராய், சர்சையது அகமதுகான்,
- இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி, அம்பேத்கர்.

**56. மனித உரிமைகள் என்றால் என்ன?**

- இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.

**57. இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப்பிரிவு எதனை அறிவுறுத்துகிறது?**

- 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

**58. பணத்தின் மதிப்பு என்றால் என்ன?**

- பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியைக் குறிக்கும்.
- பணத்தின் மதிப்பு இரு வகைப்படும்.
  1. பணத்தின் அக மதிப்பு
  2. பணத்தின் புற மதிப்பு

**59. சாலை பாதுகாப்பு நமக்கு ஏன் முக்கியமானது?**

- சாலை விபத்துக்களால் லட்சக்கணக்கான மக்கள் காயமடைகின்றனர்.
- அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. சாலைப்பாதுகாப்பு என்பது சாலையில பயணிக்கும் அனைவருக்கும் அவசியமானது.

**60. ஏதேனும் நான்கு சாலைவிதிகளை எழுதுக.**

- ஒருவழிச்சாலையில் ஓட்டுநர் தனது வலது புறம் மட்டும் வாகனங்களை முந்திச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
- இரு வழிச்சாலையில் ஓட்டுநர் தனது இடது புறம் மட்டும் வாகனங்களைச் செலுத்த வேண்டும்.
- பாதசாரி கோடுகள், சாலைச் சந்திப்புகளில் கட்டாயம் வாகன வேகத்தை குறைக்க வேண்டும்.

- பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றின் அருகில் ஒலிப்பான்களைப் பயன்படுத்தக் கூடாது.

## VIII. விரிவான விடையளி (ஏதேனும் நான்கு மட்டும்) (4 x 5 = 20)

**61. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

- இங்கிலாந்து ராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுக்கு வர்த்தகம் செய்ய வர்த்தக நிறுவனங்களுக்கு கி.பி. 1600 ஆம் ஆண்டு பட்டயம் வழங்கினார்.
- 1608 ல் ஜஹாங்கீர் அரசவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகள் பெற அனுப்பி வைக்கப்பட்டார்.
- சூரத் நகரில் ஆங்கில வாணிப மையம் அமைக்க 1608 ல் மறுத்த ஜஹாங்கீர் 1613 ல் மீண்டும் அனுமதி வழங்கினார்.
- பின்னர் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய பகுதிகளுக்கு வணிக அனுமதி வழங்கப்பட்டது.
- 1639 ல் பிரான்ஸ் டே என்ற ஆங்கில வணிகர் சென்னையைக் குத்தகைக்கு வாங்கி புனித ஜார்ஜ் கோட்டை என்ற வணிக மையத்தை நிறுவினார்.

**62. தேசிய கல்விக் கொள்கை பற்றி விவரி.**

- சுதந்திரத்திற்கு பிறகு 1968 ன் முதல் தேசியக் கொள்கை இந்தியக் கல்வி வரலாற்றில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
- பொதுவான குடியுரிமை, கலாச்சாரம், தேசிய ஒருமைப்பாடு - இதன் நோக்கங்கள்.
- 1986 ல் இந்திய அரசு புதிய கல்விக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது.
- விளிம்புநிலை மக்களுக்கு சமவாய்ப்பு, உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் மூலம் கிராத்தை வலுவூட்டல்.
- தொடக்கப் பள்ளிகளை தேசிய அளவில் மேம்படுத்த கரும்பலகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1992ல் புதிய கல்விக் கொள்கையானது மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.

**63. மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.**

மண் உருவாகும் விதத்தில் அவற்றின் நிறம் பௌதீக மற்றும் இரசாயன பண்புகளின் அடிப்படையில் ஆறு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

*1. வண்டல் மண்:*

- ஆற்றுச் சமவெளிகள், வெள்ளச் சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது.
- நுண்ணிய துகள்களால் உருவாக்கப்படுகிறது.
- நெல், கரும்பு, கோதுமை, சணல் மற்ற உணவுப் பயிர் பயிரிட ஏற்றது.

*2. கரிசல் மண்:*

- தீப்பாறைகள் சிதைவடைவதால் உருவாகிறது.
- இயற்கையிலேயே களிமண் தன்மையும், ஈரத்தை தக்க வைக்கும் தன்மையும் உடையது.
- பருத்தி நன்கு வளரும்.

*3. செம்மண் :*

- உருமாறிய பாறைகள் மற்றும் படிகப் பாறைகள் சிதைவடைதலால் உருவாகிறது.
- இம்மண்ணில் உள்ள இரும்பு ஆக்ஸைடைப் பொறுத்து பழுப்பு முதல் சிகப்பு நிறம் வரை வேறுபடும்.
- தினைப் பயிர் வளர ஏற்றது.

*4. சரளை மண் :*

- அயன மண்டல காலநிலையில் உருவாகிறது.
- வளம் குறைந்த மண்
- தேயிலை, காப்பி போன்ற தோட்டப்பயிர்கள் பயிரிட ஏற்றது.

*5. மலைமண் :*

- மலைச்சரிவுகளில் காணப்படும். காரத்தன்மையுடையது.

*6. பாலைமண் :*

- பாலைவனத்தில் காணப்படும். உவர்த்தன்மை, வளமற்ற மண்

**64. இடம்பெயர்தலின் பல்வேறு வகைகள் யாவை? அவைகளை விளக்குக.**

1. நிர்வாக எல்லை அடிப்படையில் இடம்பெயர்வுகள்:

அ. உள்நாட்டு இடம்பெயர்வு

1. ஊரகத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கி இடம்பெயர்தல்
2. நகரத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்தல்
3. ஊரகத்தில் இருந்து ஊரகத்திற்கு இடம் பெயர்தல்
4. நகர்ப்புறத்தில் இருந்து ஊரக பகுதிக்கு இடம்பெயர்தல்.

ஆ. சர்வதேச இடம் பெயர்வு

2. இடம் பெயர்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெயர்தல்:

1. தன்னார்வ இடம் பெயர்வு
2. தன்னார்வமில்லா இடம் பெயர்வு

3. இடம்பெயர்ந்த இடத்தில் தங்கும் கால அளவின் அடிப்படையில் இடம்பெயர்தல்:

1. குறுகிய கால இடம்பெயர்வு
2. நீண்ட கால இடம்பெயர்வு
3. பருவகால இடம்பெயர்வு

**65. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.**

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். முக்கிய முடிவுகளை எடுப்பவர்.
- முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார்.
- மாநில கொள்கை முடிவுகளில் இவரது முடிவே இறுதியானது.
- முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே மாநிலத்தின் முக்கிய உயர் அதிகாரிகளை ஆளுநர் நியமிக்கிறார்.

**66. குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?**

- குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்து. தேசத்தின் எதிர்காலம் ஆகும்.
- எனவே அனைத்து வகை சுரண்டல், தவறான பயன்பாட்டிலிருந்து காத்தல் அவசியம்.
- **இந்தியாவில் உள்ள முக்கிய குழந்தைப் பாதுகாப்பு சட்டங்கள்:**

1. கல்வி உரிமைச் சட்டம்:

6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வியை வழங்குவதற்கான சட்டப்பிரிவு 21 ஏ வழிவகை செய்கிறது.

2. குழந்தைத் தொழிலாளர் சட்டம்:

15 வயது வரை குழந்தைகளை வேலைக்கு அமர்த்த தடைசெய்கிறது.

3. சிறார் நீதிச் சட்டம் 2000:

கவனிப்பு இல்லாத குழந்தைகளை நட்புரீதியில் சீர்திருத்த உதவுகிறது.

4. போக்சோ சட்டம் 2012:

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைக் காக்கிறது.

**67. பணத்தின் பணிகள் யாவை? அவற்றை விளக்குக.**

- அ). முதன்மை அல்லது முக்கிய பணிகள்:
  1. பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை
  2. மதிப்பின் அளவுகோல்
- ஆ). இரண்டாம் நிலை பணிகள்:
  1. எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு
  2. மதிப்பின் நிலை கலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்
  3. மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி
- இ). வரையறுக்கப்பட்ட பணிகள்:
  1. கடன் அடிப்படையில் இயக்கப்படுகிறது.
  2. மூலதனத்தின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு
  3. நாட்டு வருவாயின் அளவீடு மற்றும் விநியோகம்.


**68. சாலை விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?**

1. எப்பொழுதும் இடதுபுறமாகவே செல்வது
2. வளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகம் குறைத்தல்
3. தலைக்கவசம் அணிவது
4. வேக வரம்பை ஒருபோதும் மீறக்கூடாது.
5. சரியான இடைவெளி விட்டு பின்தொடரவும்.

VII. **இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**

*(10 மட்டும்)* **(10 x 1 = 10)**

1. சென்னை
2. சதாரா
3. பூனா
4. நாக்பூர்
5. காஷ்மீர்
6. தில்லி
7. நாளந்தா
8. தட்சசீலம்
9. வல்லபி
10. காஞ்சி
11. விக்கிரமசீலா
12. லக்னோ
13. அலகாபாத்
14. கொச்சி
15. கல்கத்தா




**ஆக்கம் & வடிவமைப்பு:**

**ஆ.சங்கர்** M.Sc., M.A., B.Ed., D.T.E.,
**பட்டதாரி ஆசிரியர் (ச.அ),**
**அரசு உயர்நிலைப் பள்ளி,**
**சுண்டக்காம்பாளையம்,**
**நம்பியூர் (வ), ஈரோடு மாவட்டம்.**